# நஃபிலான நோன்புகள் - 2

## 6. அய்யாமுல் பீள் நோன்புகள் (பிரதி மாதம்13, 14, 15 வது நாட்களின் நோன்புகள்

மாதத்தின் 13, 14, 15 ஆகிய மூன்று நாட்கள் நோன்பு நோற்குமாறு பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கட்டளையிட்டார்கள், என அறிவிப்பு அபூதர் (ரலியல்லாஹு அன்ஹு)

**(ஆதாரம்: நஸயீ, திர்மிதி)**

மற்றொரு ரிவாயத்தில் 'அய்யாமுல் ஃபீளுடைய மூன்று நாட்கள்' என வருகிறது. (இந்த மூன்று நாட்களுக்கு அய்யாமுல் பீள் (நிலா பிரகாசிக்கும் நாட்கள்) எனக் கூறப்படும்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஊரில் தங்கியிருக்கும் போதும் சரி, பயணத்திலிருக்கும் போதும் சரி அய்யாமுல் பீள் நோன்புகளை விட மாட்டார்கள்' அறிவிப்பாளர்:அப்துல்லாஹ் இப்னு அப்பாஸி ரலியல்லாஹு அன்ஹு

**(ஆதாரம்: புகாரி)**

மேலும் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்:

'ஒவ்வொரு மாதமும் மூன்று நாட்கள் நோன்பு நோற்குமாறும், ளுஹா வேளையில் இரண்டு ரக் அத்துக்கள் தொழுமாறும், உறங்குவதற்கு முன் வித்ருத்தொழுகையைத் தொழுதுவருமாறும் என் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எனக்கு அறிவுரை பகர்ந்தார்கள்.

**(ஆதாரம்: புகாரி எண்.1981)**

## 7. திங்கள், வியாழன் நோன்புகள்

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம், திங்கட்கிழமை நோன்பு பற்றி கேட்கப்பட்டபோது 'அந்நாளில் தான் நான் பிறந்தேன். அந்நாளில் தான் நான் நபியாக அனுப்பப்பட்டேன். அதில் தான் எனக்கு (குர்ஆன்) அருளப்பட்டது' என்று கூறினார்கள் என அபூகதாதா (ரலியல்லாஹு அன்ஹு) அறிவிக்கிறார்கள்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக அபூஹுரைரா(ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

'மக்களின் அமல்கள் (நல்லறங்கள்) திங்களன்றும், வியாழனன்றும் அல்லாஹ்விடம் சமர்பிக்கப்படுகின்றன. ஆகவே நோன்பாளியாக இருக்கும் நிலையில் என் அமல்கள் சமர்பிக்கப்படுவதை விரும்புகிறேன்.'

**( ஆதாரம்: திர்மிதி, முஸ்லீம்)**

## 8. சனி ஞாயிறு இரு நாட்களில் நோன்புகள்

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சனி,ஞாயிற்றுக்கிழமை நாட்களில் அதிக நோன்பு நோற்பவர்களாக இருந்தார்கள். இவை இரண்டும் இணைவைப்பவர்களின் பெருநாட்கள் ஆகும். நான் அவர்களுக்கு மாறு செய்ய விரும்புகிறேன்.

அறிவிப்பாளர்: அன்னைஉம்முஸலமா (ரலியல்லாஹு அன்ஹா)

**(ஆதாரம்: அஹ்மத் பைஹகீ, ஹாக்கிம் இப்னு குஸையா)**

## 9. ஒருநாள் விட்டு ஒருநாள் நோற்கும் நோன்புகள்
## (தாவூது நபி அலைஹிஸ்ஸலாம் மின் நோன்பு)

'ஒவ்வொரு மாதமும் மூன்று நாட்கள் நோன்பு நோற்பீராக!' என்று பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் என்னிடம் கூறினார்கள். இதைவிட நான் அதிகம் சக்தி பெற்றுள்ளேன் என்று கூறியபோது முடிவாக ஒரு நாள் நோன்பு நோற்று ஒருநாள் விட்டு விடுவீராக, என்று கூறினார்கள்.

(அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரலியல்லாஹுஅன்ஹு),

**(ஆதாரம்: புகாரி எண்:1978)**

மற்றொரு ஹதீஸில் 'தாவூது நபி அலைஹிஸ்ஸலாம் மின் நோன்பை நோற்பீராக! அவர்கள் ஒருநாளை விட்டு ஒருநாள் நோன்பு நோற்பார்கள்' அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர்(ரலியல்லாஹுஅன்ஹு)

**(ஆதாரம்: புகாரி எண்:1979)**

பெருமானார் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் நோன்பை விடவேமாட்டார்கள் எனச் சொல்லுமளவிற்கு அதிகமாக நோன்பும் வைத்துள்ளார்கள். அதைப்போல நோன்பு நோற்க மாட்டார்கள் என்று கூறுமளவுக்கு நோன்பை விட்டுமிருக்கிறார்கள். என அன்னை ஆயிஷா (ரலியல்லாஹுஅன்ஹா) அறிவிகக்கிரார்கள்.

**(ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)**

## 10. அஷ்ஹுருல் ஹுரும்

கணணனியமிக்க மாதங்களான துல்கஃதா, துல்ஹிஜ்ஜா, முஹர்ரம், ரஜப் ஆகிய நான்கு மாதங்களில் அதிகமாக நோன்பு நோற்பதை பெருமானார் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் சிறப்பித்துள்ளார்கள்.

பாஹிலா இனத்தைச் சார்ந்த தமது தந்தை அல்லது சிறிய தந்தை ஒரு வருடத்திற்குப்பிறகு பெருமானார் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து தாம் அதிகமாக நோன்பு நோற்க விரும்புவதாகக் கூறியபோது, பொறுமை மிக்க மாதத்தில் நோன்பு நோற்பீராக, பின்னர், மாதத்திற்கொரு நோன்பு நோற்பீராக!, பின்னர் மாதத்திற்கு இருநோன்புகள் நோற்பீராக! என்று கூறியும் மனநிறைவு பெறாத அவர். இன்னும் அதிக நோன்பு வைப்பதற்கு சக்தி பெற்றுள்ளேன் என்று கூற, அவ்வாறாயின் 'புனித மிக்க மாதங்களில் அதிகம் நோன்பு நோற்கவும், சில நாட்கள் விட்டுவிடவும் செய்து வருவீராக!' என்று மூன்று முறைகள் கூறி தமது மூன்று விரல்களையும் காட்டினார்கள் (ஹதீஸின் சுருக்கம்)

அறிவிப்பாளர்: முஜீபத்துல் பாஹிலிய்யா

**(ஆதாரம்: அஹ்மது, அபூதாவூது, இப்னு மாஜா, பைஹகீ.)**

www.bathusha.com
Tamil Islamic Online Radio 24h

**உண்மையும் நன்மையும் உன்னிலும் என்னிலும் உண்டாகட்டும்**

**AL ALIM S.A.M.SEYED JAHAN MOWLANA HUSAINY JALALIY**

**BATHUSHA.COM**